**17.09.2024**

**தேசமாக தேசிய இனத்தின் திரட்சியாக தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்குமாறு எமது உறவுகளை கோருகின்றோம்**

**தமிழ் தேசிய இனமானது கடந்த ஏழு சதாப்பதங்களாக விடுதலைக்காக பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது. தமிழ் மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மை மிக்க ஒரு இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவ தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள் உள்ளது என்பதையும் சிங்கள பேரினவாத அரசால் புரிந்து கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை.**

**சிங்கள அரசியல் தலைமைகளிடம் இருந்து நீதி கிடைக்கப் போவதில்லை என்பதையும் நாம் தெளிவாக புரிந்து எமது மக்களின் அரசியல் அபிலாசைகளான தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைந்த மரபுவழித்தாயகம் என்பதை நிலைநிறுத்தி எமது உரிமையை நாமே போராடிப்பெறவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சிங்கள பேரினவாத அரசிடம் இல்லை என்ற காரணத்தினால் நாம் சர்வதேசத்திடம் எமக்கான நீதியை கோரி தொடந்தும் போராடி வருகின்றோம்.**

**ஏழு தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழர் தாயகத்தை சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்கள், கருத்து உருவாக்கிகள், புத்திஜீவிகள், குடிசார் அமைப்புக்கள், கிராமமட்ட அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், மாணவ அமைப்புகள், இணைந்து உருவாக்கிய மக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பாகும்.**

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பால் தென் தாயகத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பா.அரியநேத்திரன் அவர்களை சங்கு சின்னத்தில் 21/09/2024 நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் தமிழ்பொது வேட்பாளராக நிறுத்தியுள்ளார்கள்.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு பகுதிகள் இராணுவ மயமாக்கல் , பௌத்த சிங்கள மயமாக்கல் என்ற திட்டமிடப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்புனூடாக சிங்கள பௌளத்த் பேரினவாதம் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு செய்துவருகிறது. சிங்கள பேரினவாத அரசு ஈழத்தமிழர்களை சிறிலங்காவின் அரசியல் அமைப்பிற்க்கு உட்பட்டு எம்மை அரசியல் அடிப்படை உரிமைகள் அற்ற அடிமைகளாகவே வைத்திருக்க முனைவதோடு, ஈழத்தமிழர்கள் இலங்கைத்தீவின் தேசிய இனம் என்பதை நீக்கம் செய்யவும் முனைகிறது. ஆகவே தமிழர்களாகிய நாங்கள் ஓரே தேசமாக தமிழ்தேசியத்தின் திரட்சியாக ஓரணியில் நின்று எமது தார்மீக பலத்தை நிரூபிப்பதற்காக எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் சங்கு சின்னத்திற்க்கு மட்டும் வாக்களிப்பதனூடாக எங்கள் ஒருமித்த பலத்தை நிருபிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ்தேசிய பொதுக் கட்டமைப்பால் தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தி முன்வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையானது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை வலியுறுத்தி நிற்பதாகவே உள்ளதையும், இதனை பொது வாக்கெடுப்பினை நோக்கிய ஆர்மபசெயல் முனைப்பிற்கான தொடக்கப்புள்ளியாகவும் எண்ணுகின்றோம்.

தமிழர்களின் பாதுகாப்பிற்க்கு பொறுப்பளிக்க கூடிய வகையில் பன்னாட்டு பொறிமுறையினை வலியுறுத்தியும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதியினை வலியுறுத்தியும் தமிழினப்படுகொலைக்கு பொறுப்புக்கூற வைக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையிடம் பாரப்படுத்துவதன் ஊடாக தமிழினப்படுகொலைக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் எனவும்.

**வலியுறுத்தி நிற்கின்ற தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கையினை வரவேற்பதோடு அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, அதுபோல் நாமும் இணைந்தால் பலமே! என்பதற்கு அமைய தமிழ் தேசமாக தேசிய இனத்தின் திரட்சியாக சங்கு சின்னத்திற்குக்கு மட்டும் வாக்களித்து எமது பலத்தை நிரூபிப்போம்.அத்துடன் சர்வதேச சமூகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க விரைந்து செயற்படுமாறு கேட்டுகொள்கின்றோம்.**

**வடக்கு கிழக்கு வலிந்துகணாமல் ஆக்கப்பட்ட எட்டு (8) மாவட்டத்தின் தலைவிகள்**

**மன்னார் - M. உதயச்சந்திரா**

**கிளிநொச்சி - K. கோகிலவாணி**

**யாழ்ப்பாணம் - S. இளங்கோதை**

**திருகோணமலை - S. தேவி**

**முல்லைத்தீவு - K. ஈஸ்வரி**

**மட்டக்களப்பு - A. அமலநாயகி**

**வவுனியா - S. ஜெனித்தா**

**அம்பாறை - T. செல்வராணி**